விரைந்து செயல் படுத்த, அண்மையிலே அமைச்சர் அவர்கள் மாயூரம் வந்தபோதுகூட மாயூரத்திற்கு எந்த வரம் கேட்டாலும் தரப்படும் என்று சொன்னுர்கள்—இந்த வரத்தை விரைவிலே நிறைவேற்றி கொடுக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இது வரம் அல்ல, நியாயமான கோரிக்கை. நிறைவேற்றித்தருவது அரசின் கடமை.

கோட்டைப்பட்டினம் பஞ்சாயத்து.

*690 வினு—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புதுக்கோட்டை மாவட்டம், கோட்டைப்பட்டினம் பஞ்சாயத்து தலைவர் சுல்தான் என்பவர் கடற்கரை ஓரங்களில் சிறிய கீற்றுக் கொட்டகைகளை அரசு நிலங்களில் அமைத்து வாடகையை விசைப்படகுகாரர்களிடம் வசூலிப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) இதன்மீது தகுந்த நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) சுல்தான் என்ற பெயரில் யாரும் கோட்டைப்பட்டினம் பஞ்சாயத்து தலைவராகப் பணியாற்றவில்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த சுல்தான் என்கின்ற நபர் அந்தப் பகுதியில் அரசாங்க நிலங்களை எல்லாம் ஆக்கிரமிப்பு செய்து, விசைப்படகுக்காரர்களுக்குக் கொடுப்பதாக என்னிடம் விவரங்கள் இருக்கின்றன. அதை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரிடம் கொடுக்கிறேன். அதன்மீது நடவடிக்கை எடுத்து அவற்றைக் காலி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : சுல்தான் என்பவர் பஞ்சாயத்துத் தலைவர் இல்லை. அவருடைய பட்டா பூமி ஜகதாப்பட்டினம் கடற்கரை சமீபம் இருக்கிறது. இவருடைய பட்டா பூமி சர்வே எண் 169/3-ல் மூன்று சிறு ஓலைக் குடிசைகள் கட்டிக் கொடுத்திருக்கிருர். அதில் குடியிருப்பவர்கள் வாடகை எதுவும் கொடுக்கவில்லை என்று விசாரணையில் தெரிகிறது. ஆகவே நடவடிக்கை எடுக்க எந்தவிதமான காரணமும் இல்லை.

1978 மார்ச் 28]

திரு. மு. அம்பிகாபதி : பஞ்சாயத்து தலைவர் அல்ல என்ருலும், அங்கே இருக்கிற தப்சு அடிக்கிற கூட்டத்தின் தலைவர் என்று சொல்லுகிருர்கள். என்னிடம் விவரம் இருக்கிறது. அங்கே நானே நேரடியாக போயிருந்தேன். அங்கே கொட்டகைக் கட்டிக் கொடுத்து வசூலித்து தானே எடுத்துக் கொள்கிருர்கள் என்றெல்லாம் சொல்கிருர்கள். நானே அந்த ஊருக்குப் போயிருந்தேன். அமைச்சருக்கு ஏதோ தவருன தகவலைக் கொடுத்திருக்கிருர்கள். இதை மீண்டும் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பஞ்சாயத்துத் தலைவர் என்ற பெயரிலே ஒருவர்தான் இருக்க முடியும். இவர் தலைவர் அல்ல. ஆனால் தவறுகள் ஏதோ நடப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துக் கூறுவார்களானல் விசாரிக்க ஆட்சேபனை இல்லை.

விக்கிரமசிங்கபுரம் பேரூராட்சி.

*691 வினு— திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் தொகுதியிலுள்ள மதுராகோட்ஸ் மில் பகுதியையும் அதை ஒட்டியுள்ள பகுதியையும் விக்கிரமசிங்கபுரம் பேரூராட்சியுடன் சேர்க்குமாறு பேரூராட்சியும் சர்வகட்சியினரும் அரசிடம் கோரிக்கை சமர்ப்பித்துள்ளார்களா?

(ஆ) ஆம் எனில், அக்கோரிக்கை மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) மற்றும் (ஆ): விக்கிரமசிங்கபுரம் பேரூராட்சி மன்ற தலைவர், உப தலைவர், உறுப்பினர் மற்றும் பொது மக்கள் ஆகியோரிடமிருந்து வந்த கோரிக்கை அரசின் ஆய்வில் இன்னும் உள்ளது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : துணைத் தலைவர் அவர்களே, இந்த விக்கிரமசிங்கபுரம் பேரூராட்சியை ஒட்டித்தான் மதுரா கோட்ஸ் இருக்கிறது என்று அரசுக்குத் தெரியுமா ? அப்படி இருந்தும் கூட 10 கிலோ மீட்டர் தள்ளி உள்ள மணிமுத்தாறு டவுன்ஷிப்போடு சேர்த்திருப்பது அரசுக்குத் தெரியுமா ? அதை அனுதாபத்துடன் கவனித்து விக்கிரமசிங்கபுரம் பேரூராட்சியோடு இணைக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, நகரியம் என்று ஒன்று அமைப்பதற்கே தொழிலாளர் குடியிருப்புக்கள் இருந்தால்தான் அமைக்க முடியும். ஆக மணிமுத்தாறு